

## மார்த்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரியில்

# வினாடி-வினா போட்டி

குழித்துறை, அக்.18-

முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் பிறந்த நாளை முன்னிட்டு மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி இயற்பியல் துறை சார்பில் குமரி மாவட்ட மேல்நிலைப்பள்ளிகளுக்கு இடையே இயற்பியல் வினாடி-வினா போட்டி நடந்தது. நிகழ்ச்சியில் கல்லூரி தாளாளர் வினோத் குமார் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் ஷீலா கிறிஸ்டி முன்னிலை வகித்தார். போட்டியில் மாவட்டத்தில் இருந்து 34 பள்ளிகளை சேர்ந்த மாணவ- மாணவிகள் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டன. இதில் கல்லூரி துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

Scanned with CamScanner